Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 31 2025

வியாழக்கிழமை 31, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 295 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

### லலித், குகன் விவகாரம்: கொழும்பில் சாட்சியமளிக்க

# கோட்டா தயார்

## யாழ்ப்பாணத்துக்கு பதிலாக கொழும்பில் அனுமதிக்குமாறு கோரிக்கை

மனித உரிமை ஆர்வலர்களான லலித் மற்றும் குகன் காணாமல் போனது தொடர்பான ஹேபியஸ் கார்பஸ் விசாரணை தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாராக இருப்பதாக அவரது சட்டத்தரணி உயர்நீதிமன்றத்தில் புதன்கிழமை (20) அன்று தெரிவித்தார்.

ஹேபியஸ் கார்பஸ் விசாரணை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது,

தொடர்ச்சி P2





## 2 நாட்களில் இருளில் மூழ்க போகும் பூமி

21ஆம் நூற்றாண்டின் நீளமான சூரிய கிரகணம் 2025 ஆகஸ்ட் 2ம் திகதி நிகழ்கிறது. 2025 ஆகஸ்ட் 2ஆம் திகதி நிகழவிருக்கும் மிக நீண்ட சூரிய கிரகணம் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். ஸ்பெயின், எகிப்து மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் இது முழுமையாகத் தெரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கமான கிரகணங்கள் சில நிமிடங்களில் முடிவடையும் நிலையில், இந்த நிகழ்வு சுமார் 6 நிமிடங்கள் 23 வினாடிகள் வரை நீடிக்கும். ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இந்த சூரிய கிரகணம் தெளிவாகத் தெரியும். சில பகுதிகளில் ஆறு நிமிடங்களுக்கு மேல் இருள் சூழ்ந்திருக்கும்.

தொடர்ச்சி P2

## கடலோர சட்டவிரோத கட்டிடங்களுக்கு அபராதம்

கடலோரப் பகுதியில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு வருடாந்திர அபராதம் விதிக்க சட்ட விதிகளை அறிமுகப்படுத்துவதாகக் கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள மேலாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

கடலோரப் பகுதியில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு வருடாந்திர அனுமதி வழங்கவும் திட்டமிட்டுள்ளதாக அதன் இயக்குநர் ஜெனரல் டாக்டர் டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.




### சம்பூர் மனித எச்சங்கள்:

## 6 அன்று விசேட கூட்டம்

■ எஸ்.கீதபொன்கலன்

சம்பூர் மனித எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் தொடர்ந்து அகழ்வு செய்வதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க எதிர்வரும் ஆகஸ்ட் 6ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்று மூதூர் நீதிவான் நீதிமன்றம் புதன்கிழமை (30) அன்று தீர்மானித்துள்ளது.

இக்கூட்டத்தில் தொல்பொருள் திணைக்கழகம்,தடயவியல் பிரிவினர்,சட்ட வைத்திய அதிகாரி, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், குற்றவியல் பிரிவினர், தேசிய நிலக்கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர்,

தொடர்ச்சி P2



### கம்சத்கா தீபகற்பத்தில் 8.7 ரிக்டரில் நிலநடுக்கம்:

## சுனாமி பேரலைகள் ஊழித்தாண்டவம்

ரஷ்யாவின் கம்சத்கா தீபகற்ப பகுதியில் அதிக சக்தி வாய்ந்த நிலநடுக்கம் புதன்கிழமை (30) ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 8.7 ஆக பதிவாகி உள்ளது. இதனையடுத்து, ஜப்பான் மற்றும் அமெரிக்க சுனாமி எச்சரிக்கை மையத்தில் இருந்து சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.

இதுபற்றி அமெரிக்க புவியியல் மையம் வெளியிட்ட செய்தியில், 19.3 கி.மீ. ஆழத்தில், 1.65 இலட்சம் பேர் வசிக்க கூடிய அவச்சா என்ற கடலோர நகரத்தில், கம்சாத்ஸ்கை நகரில் இருந்து கிழக்கு-தென்கிழக்கே 125 கி.மீ. தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

தொடர்ச்சி P2

## 'ரத்தரங்' மகள் கைது

'ரத்தரங்' என்றழைக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள், கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான ஜீப் பாகங்களிலிருந்து இணைக்கப்பட்ட வாகனம் சம்பவம் தொடர்பாக கைது செய்யத் தேடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபய குணவர்தனவின் மகள், பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவில் புதன்கிழமை (30) அன்று ஒரு வழக்கறிஞர் மூலமாக சரணடைந்தார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், அப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான ஜீப்பை கடந்த




20 ஆம் திகதி, ஓட்டிச் சென்றபோது, பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேவின் மகன் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## "OTP எண்களை வழங்க வேண்டாம்"

வட்ஸ்அப் பயனர்களின் கணக்குகளுக்குள் ஊடுருவி, போலி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்பி பண மோசடி செய்யும் முயற்சிகள் குறித்து இந்த நாட்களில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பதிவாகுவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோசடி செய்பவர்கள் பயனர்களை ஏமாற்றி வட்ஸ்அப் OTP எண்களைப் பெற்று போலி செய்திகளை அனுப்பி மோசடி செய்து வருவது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன்படி, இந்தப் பண மோசடி குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

### இந்தியாவுடனான ஒப்பந்தம்:

## இரத்து செய்யுமாறு கோரி மனுத்தாக்கல்

இலங்கை குடிமக்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்தியாவுடன் இலங்கை அரசு கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) செல்லாததாக்க உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## நிஷாந்தவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்னவை ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுஹேர பகுதியில் நபரொருவரை கடத்தி, கொலை செய்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் சந்தேகநபரான நிஷாந்த உலுகேதென்ன கடற்படையின் புலனாய்வு பிரிவின் பிரதானியாக செயற்பட்டதுடன் கடத்தப்பட்ட நபர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் சட்டவிரோத தடுப்பு முகாம் அவரது கண்காணிப்பில் செயற்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடத்தப்பட்ட நபர் பல நாட்களுக்கு பின்னர் சட்டவிரோத தடுப்பு முகாமிலிருந்து அனுப்பிய கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ச்சி P2

## இனிய பாரதியின் சகா சபாபதி கைது

■ கனகராசா சரவணன், பாறுக் ஷிஹான்

இனிய பாரதியின் இன்னொரு சகாவான வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சபாபதி என்பவரை மட்டக்களப்பு கிரான் வைத்து செவ்வாய்க்கிழமை(29) அன்று கொழும்பில் இருந்து சென்ற குற்ற விசாரணைப் பிரிவு சிஐடி யினர் மாலை 4.00 மணியளவில் கைது செய்துள்ளனர்.

ரி.எம்.வி.பி. கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பாளருமான கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை 2007-6-28ஆம் திகதி திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 6ம் திகதி திருக்கோவில் மற்றும் மட்டு. சந்திவெளி பகுதிகளில் வைத்து சி.ஐ.டியினர் கைது செய்தனர்.

இதில் கைது செய்த இனியபாரதியிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் வெலிகந்தை தீவுச்சேனையை வதை முகாமில் இருந்து செயற்பட்டுவந்த, வரும் இனிய பாரதியின் சகாவான அந்த பிரதேசத்தை சேர்ந்த பா.சபாபதியை கிரான் வைரவர் கோவில் வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து மாலை 4.00 மணியளவில் சிஐடியினர் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை சிஐடி யினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இனியபாரதியை கைது செய்து விசாரணையின் பின்னர் இனிய பாரதியின் முன்னாள் சாரதி செந்தூரன், அவரது சகாவான சந்திவெளியைச் சேர்ந்த சசீந்திரன் தவசீலன் மற்றும் சகாவான திருக்கோயில் விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்கினேஸ்வரன் மற்றும் தற்போது கைது செய்யப்பட்டவர் உட்பட இனிய பாரதியின் சகாக்கள் ஆகிய 4 பேரை சிஐடி யினர் தொடர்ச்சியாக கைதுசெய்துள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# கோட்டா தயார்

முன்னாள் ஜனாதிபதி சார்பாக ஆஜரான ஜனாதிபதி வழக்கறிஞர் றொமேஷ் டி சில்வா இதனை நீதிமன்றத்தின் கவனத்துக்கு தெரிவித்தார்.

இருப்பினும், பாதுகாப்பு காரணங்களுக்காக தனது கட்சிக்காரர் யாழ்ப்பாணத்திற்குப் பதிலாக கொழும்பில் உள்ள ஒரு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராக அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார்.

மனுதாரர்கள் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் நுவான் போபேஜ், இந்தக் கோரிக்கைக்கு தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

அதன்படி, நீதியரசர் யசந்த கோடகொட, குமுதினி விக்ரமசிங்க மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு, நான்கு வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யுமாறு உத்தரவிட்டது.

லலித் மற்றும் குகன் காணாமல் போனது தொடர்பான ஹேபியஸ் கார்பஸ் விசாரணையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டும் என்ற நோட்டீசை இரத்து செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக உத்தரவு பிறப்பித்திருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து பாதிக்கப்பட்ட தரப்பினர் இந்த மேன்முறையீட்டை தாக்கல் செய்திருந்தனர்.

ஹேபியஸ் கார்பஸ் விசாரணையில் ஆஜராகி சாட்சியமளிக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

மனித உரிமைகள் மற்றும் அரசியல் ஆர்வலர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக பணியாற்றியபோது 2011 டிசெம்பர் 9, அன்று காணாமல் போனார்கள்.



## 2 நாட்களில் இருளில் மூழ்க போகும் பூமி

இது ஒரு முக்கியமான வானியல் நிகழ்வாகும். இந்தியா முழுவதும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை கிரகணம் தெரியும்.

இந்தக் கிரகணத்தின்போது, சூரியனின் ஒளிவட்டத்தை நீண்ட நேரம் காண முடியும். ஆசியா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளில் இது முழுமையாகத் தெரியாது. எனினும், இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் ஓரளவு தெரியும்.

தெற்கு ஸ்பெயின், வட ஆபிரிக்கா, சவூதி அரேபியா, ஏமன் மற்றும் ஓமன் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் முழு கிரகணத்தையும் காணலாம். எகிப்தின் லக்ஸர் நகரில் அதிகபட்சமாக 6 நிமிடம் 23 வினாடிகள் வரை கிரகணம் நீடிக்கும்.

இந்தியாவில், ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா மற்றும் கோவா போன்ற மாநிலங்களில் சூரியனின் 10% முதல் 30% வரை மறைக்கப்படும்.

இந்த அரிய நிகழ்வு, சந்திரன் பூமிக்கு அருகில் வரும்போதும், பூமி சூரியனிலிருந்து வெகு தொலைவில் இருக்கும்போது நிகழ்கிறது. இந்த சீரமைவின் காரணமாக, சந்திரன் சூரியனை முழுமையாக மறைக்கும் நேரம் அதிகரிக்கிறது. 1991 மற்றும் 2114-க்கு இடையில் பூமியில் இருந்து பார்க்கக்கூடிய மிக நீண்ட சூரிய கிரகணம் இதுவாகும். முழு கிரகணத்தின்போது சூரியனின் வெளிப்புற வளிமண்டலமான ஒளிவட்டத்தைக் காண முடியும்.



## சுனாமி பேரலைகள் ஊழித்தாண்டவம்

எனினும், பின்னர் அது 8.0 என திருத்தி அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, கம்சத்கா பகுதியில் 3 முதல் 4 மீட்டர் உயரத்திற்கு கடல் அலைகள் பதிவாகின. இதனால், சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.

மூன்று வாகனங்களுடன்

## போலி பொலிஸ் பரிசோதகர் கைது

தலைமைப் பொலிஸ் பரிசோதகர் என்று கூறி, தங்கோவிட்ட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரியிடம் உதவி கோரியதாகக் கூறப்படும் ஒருவர் செவ்வாய்க்கிழமை (29) கைது செய்யப்பட்டதாக தங்கோவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வேவெல்தெனியவைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இது தொடர்பில்



பொலிஸார் நடத்திய விசாரணையின்போது, சந்தேக நபர் கொழும்பு-நகர வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பிரதேச போக்குவரத்து அதிகாரிகளிடம் தன்னை ஒரு பொலிஸ் பரிசோதகர் மற்றும் தலைமை பொலிஸ் பரிசோதகர் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் போது, மாற்றியமைக்கப்பட்ட கார்களையும் அவர் எடுத்துச் சென்றுள்ளார். அவருடைய வீட்டிலிருந்து மூன்று சொகுசு ஜீப்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

போலி தலைமை ஆய்வாளரின் அடையாள அட்டை மற்றும் பல பொலிஸ் சீருடைகளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.




## 6 அன்று விசேட கூட்டம்

பொலிஸ் திணைக்களம் என்பனவற்றின் அலுவலர்கள் நீதிவான் தஸ்னீம் பௌசான் தலைமையில் ஒன்று கூடி ஆராய்வது என்றும்,அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைய இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 6ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய தரப்புகளுக்கான அழைப்பை சம்பூர் பொலிஸார் அனுப்ப வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மூதூர் நீதிமன்று கடந்த 25ஆம் திகதி வழங்கிய உத்தரவிற்கு அமைய சட்டவைத்திய அதிகாரி, நீதிமன்றுக்கு புதன்கிழமை(30) அன்று அறிக்கையை முன்வைத்தார்.

கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்பு எச்சங்கள் மிகவும் பழைமையானது என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, தொல்பொருள் திணைக்களத்தினர் முன்வைத்த அறிக்கையின்படி, இவ்விடத்தில் முன்னர் இடுகாடு ஏதாவது இருந்துள்ளதா? என்பதை துல்லியமாக கூறமுடியாதுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் தீர்மானம் ஒன்றிற்கு வருவதாயின் இந்த அகழ்வுடன தொடர்புடைய சகல தரப்புகளுடனும் இணைந்து கலந்துரையாட வேண்டிய நிலை உள்ளதால் அதற்கான நடவடிக்கை எடுப்பது என்று நீதிமன்று தீர்மானித்தது.

சம்பூர் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் ஜூலை 19 ஆம் திகதி அகழ்வில் ஈடுபட்ட போது மனித மண்டையோடு மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன வெளிவந்தன. இதனை அடுத்து மூதூர் நீதிமன்ற உத்தரவின்படி அகழ்வு வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. அதனை அடுத்து 25 ந் திகதி இடத்தை பார்வையிட்ட நீதிவான் புதன்கிழமை (30) வரை அகழ்வை இடைநிறுத்த உத்தரவிட்டிருந்தார். அத்துடன் சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்பொருள் பிரிவினர் அகழ்வை தொடர்வதா,இல்லையா? என்பதை தீர்மானிக்க நீதிமன்றுக்கு அறிக்கை தரவேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தார்.

## நிஷாந்தவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



இந்த சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னர் சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், ஆகஸ்ட் 13ஆம் திகதி வரையிலும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தவறாக தடுத்து வைக்கப்பட்டவர் தன்னுயிரை மாய்த்தார்

போதைப்பொருள் வழக்குகள் தொடர்பாக தவறான முறையில் தடுத்து வைக்கப்படுவது குறித்து கவலைகளை எழுப்பிய கல்கிசை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் கீர்த்தி பெர்னாண்டோ, தவறாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சந்தேக நபர் நேற்று வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார், இருப்பினும் அவர் தற்கொலை செய்து கொண்டதால் உயிருடன் இல்லை என்றார்.

ஊடகங்களுக்குப் கருத்து தெரிவித்த கீர்த்தி பெர்னாண்டோ, தெஹிவளை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட ஆறு வழக்குகளில் போதைப்பொருள் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் இல்லாததால், கல்கிசை நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை(29) சந்தேக நபர்களை விடுவித்ததாகத் தெரிவித்தார்.

தவறான தடுப்புக்காவலில் இருந்து மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொண்ட சந்தேக நபரும் போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவர் என்பதை அவர் மேலும் வெளிப்படுத்தினார்.

“இந்த நபர் மே 2024இல் கைது செய்யப்பட்டு, பின்னர் 3,200 மி.கி. ஹெராயின் வைத்திருந்ததற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இது பிணையில் வெளிவர முடியாத குற்றம், எனவே, அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, மேல் நீதிமன்றத்தால் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

இருப்பினும், 02 மாதங்களுக்குப் பிறகு, அவர் மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொண்டார். வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, அவர் எந்த போதைப்பொருளையும் வைத்திருக்கவில்லை என்று அரசு பகுப்பாய்வாளரின் அறிக்கை அறிவித்தது. எனவே, நீதிபதி அவரை வழக்கிலிருந்து விடுவித்தார், ஆனால் அவர் இப்போது உயிருடன் இல்லை” என்று கீர்த்தி பெர்னாண்டோ கூறினார்.

இதுபோன்ற இன்னும் பல சம்பவங்கள் உள்ளன, அங்கு தவறான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள் அப்பாவி தனிநபர்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றன, வேலை இழப்புகள், திருமண முறிவுகள் மற்றும் இளம் குழந்தைகளைப் பராமரிக்காமை மற்றும் கைவிடப்படல் போன்றவை இடம்பெறுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

“இந்த தவறான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள் மூத்த பொலிஸ் அதிகாரிகளால், தேவையான விசாரணைகளை மேற்கொள்ளாமல், அனுபவம் உள்ளவர்கள் என்ற சாக்குப்போக்கின் கீழ் செய்யப்படுகின்றன.

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்கள அறிக்கைக்கு ரூ.75,000 செலவாகும், மேலும் சிறைச்சாலைகளில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.1,000 க்கு மேல் செலவிடப்படுவதால், இதுபோன்ற நிகழ்வுகளால் அரசாங்க நிதியும் வீணடிக்கப்படுகிறது” என்று அவர் கூறினார்.

இந்த தவறான கைதுகள் ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறிய கீர்த்தி பெர்னாண்டோ, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்தார்.

## ‘ரத்துரங்’ மகள் கைது




இந்த சந்தேகத்திற்கிடமான ஜீப் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தனவின் மருமகனும் கைது செய்யப்பட்டு அடுத்த மாதம் 1ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

## “OTP எண்களை வழங்க வேண்டாம்”

எந்தவொரு சூழ்நிலையிலும் ஒன்லைன் கணக்குகளுக்கான OTP எண்களை ஏனைய தரப்பினருக்கு வழங்கக்கூடாது என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இரத்து செய்யுமாறு கோரி மனுத்தாக்கல்

சமூக ஆர்வலர் அமானி ரிஷாத் ஹமீத் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.



# “இது ஒரு பெரும் வாய்ப்பாகும்”

“எமது மக்கள் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எமக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு பெரும் வாய்ப்பு இதுவாகும். இதன் மூலம் எமது தோட்டப்புற மக்களுக்கான பல்வேறு செயல் திட்டங்களை முன்னெடுப்பதற்கான விசேட கலந்துரையாடலொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது” என பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்திற்கான அபிவிருத்தி குழுக் கூட்டம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சாந்த பத்மகுமார மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகியோர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (29) அன்று இடம்பெற்றது.

இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது, மக்களுக்கான பணிகளை வினைத்திறன் மிக்கதாகவும். பணிகளை இலகுவாக்கித் துரிதப்படுத்துவதற்கும் மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன.



இதில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மாவட்டத்தின் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான தலைவராக நியமிக்கப்பட்ட அதேவேளை, கல்வி, கலாசார மற்றும் சமயத்திற்காக கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் சாந்த பத்மகுமாரவினால் நியமிக்கப்பட்டார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான உபுல் கித்சிறி - காணி நீர்ப்பாசன சுற்றாடல் மற்றும் பெருந்தோட்டம், சுனில் ராஜபக்ஷ - வர்த்தக நுகர்வோர் சுற்றுலா மற்றும் கைத்தொழில், வசந்த புஷ்பகுமார - நகர அபிவிருத்தி விஞ்ஞான தொழில்நுட்பம், ஜனக்க சேனாரத்ன - சுகாதார மற்றும் உள்ளூராட்சி மாகாண சபை, நிலுசா கமகே - மகளிர் மற்றும் இளைஞர், விளையாட்டுத் துறைகளுக்கான தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

## ‘Miss Teen Tourism’ போட்டியில் இலங்கைப் பெண்

டி.கே.ஜி.கபில

பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள ‘Miss Teen Tourism’ போட்டியில் பங்குபற்றுவதற்காக இலங்கையைச் சேர்ந்த அஞ்சனா ஹீனடிகல, இன்று புதன்கிழமை (30) அன்று பிலிப்பைன்ஸுக்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

அஞ்சனா ஹீனடிகல, இலங்கையில் நடைபெற்ற ‘Miss Teen Tourism’ போட்டியில் முதலிடம் வென்றுள்ளதையடுத்து, அவர் பிலிப்பைன்ஸுக்கு புறப்பட்டு சென்றுள்ளார்




கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து எயார் ஏசியா விமானம் AK-046 ஊடாக தாய்லாந்துக்கு சென்று இவர், அங்கிருந்து பிலிப்பைன்ஸுக்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி அன்று பிலிப்பைன்ஸில் உள்ள மணிலா நகரத்தில் ‘Miss Teen Tourism’ இறுதிச் சுற்று போட்டி நடைபெறவுள்ளதுடன், இந்த போட்டியில் உலகம் முழுவதிலும் உள்ள 40 நாடுகளில் இருந்து பல போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கள்ளக்காதல் தகராறு; ஒருவர் கொலை

கேகாலை, தெஹியோவிட்ட, கஹனாவிட்ட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (29) இரவு இடம்பெற்றுள்ளதாக தெஹியோவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திபிரிபொல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் 35 வயதுடைய திருமணமான பெண் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்துள்ளதுடன் குறித்த பெண் தனது கணவரை விட்டுப் பிரிந்து கொலை செய்யப்பட்ட நபரின் வீட்டில் தனது பிள்ளையுடன் வசித்து வந்துள்ளார்.

சம்பவ தினமான செவ்வாய்க்கிழமை (29) அன்று சந்தேக நபர் அவர்களின் வீட்டுக்குச் சென்று தகராறில் ஈடுபட்டுள்ளதுடன் காதலனைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த நபர் கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தகராறின் போது, குறித்த பெண்ணும் அவரது பிள்ளையும் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து பெண்ணின் கணவரான மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று காட்டுப்பகுதியில் தலைமறைவாக இருந்துள்ள நிலையில், புதன்கிழமை (30) காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “வாரத்தில் ஒரு நாள்”

அபு அலா

அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் "வாரத்தில் ஒரு நாள்" வேலைத்திட்டமொன்று புதன்கிழமை (30) அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அத்திட்டத்தை வாராந்தம் செயற்படுத்தவுள்ளதாகவும் குறித்த பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், “வாரத்தில் ஒரு நாள்" வேலைத்திட்டத்தின் முதலாவது ஆரம்பப் பணியை அட்டாளைச்சேனை - 16ஆம் பிரிவில் ஆரம்பித்து வைத்துள்ளோம். இத்திட்டம் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் வாரத்தில் ஒரு நாள் செயற்படுத்தப்படுகின்றவேளை, அப்பிரிவில் உள்ள பொதுமக்களின் முறைப்பாடுகளுக்குப் பதிலளித்தல், பொருத்தமான இடங்களுக்கும், செயற்படாமல் இருக்கின்ற மின் விளக்குகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வடிகான்களை துப்பரவு செய்தல், திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுதல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்” என்று குறிப்பிட்டார்.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், உலமாக்கள், பிரதேச விளையாட்டுக் கழகங்கள், சமூக சேவை அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸின் எண்ணக்கருவில் உருவான "வாரத்தில் ஒரு நாள்" என்ற இந்த வேலைத்திட்டம் அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு புதன்கிழமை (30) முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## உணவகங்களில் திடீர் சோதனை

பாறுக் ஷிஹான்

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்களை சோதனைக்குட்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கடந்த திங்கட்கிழமையில் (28) அன்று இருந்து தொடர்ச்சியாக கல்முனை மற்றும் இறக்காமம் பிரதேசங்களில் உள்ள ஹோட்டல்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் திடீர் சோதனைக்குட்ப டுத்தப்பட்டன.

பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து குறித்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவு பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தயாரிக்கும் பாத்திரங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தும் வேலைத்திட்டம் பிராந்திய பணிப்பாளரின் உத்தரவிற்கமைவாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது.

## பொறுப்பதிகாரியின் கைதை கொண்டாடிய மக்கள்

சுமனசிறி குணதிலக

மொனராகலை, ஒக்கம்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி 40,000 ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் செவ்வாய்க்கிழமை(29) அன்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒக்கம்பிட்டி பகுதியில் நடத்திச் செல்லும் மணல் வியாபாரத்தில் எந்தவித பிரச்சினையும் வராமல் பராமரிக்கவும், மணல் அகழ்வு இடத்திலிருந்து மணல் கொண்டு செல்லும்போது சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்ப்பதற்காகவும் மாதம் 50,000 ரூபாய் இலஞ்சமாக பெற்றுக்கொள்வதாகக் குறித்த வியாபாரி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும், சந்தேக நபரான பொலிஸ் பொறுப்பதிகாரியின் புதிய வீட்டின் வேலைக்காக மூன்று கியூப் மணல் அல்லது அதன் பெறுமதியான 45,000 ரூபாய் லஞ்சமாகக் கேட்டுள்ளார். தொடர்ந்து பணம் கேட்டுள்ளதுடன் மணல் கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டேன் என மிரட்டியதால் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மாளிகாவில-மொனராகலை வீதியில் நடந்துகொண்டிருந்த சந்தேக நபரான பொலிஸ் பொறுப்பதிகாரி செவ்வாய்க்கிழமை (29) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் பட்டாசுகள் கொளுத்தி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## முதல் நாள் மாலை நேர பூஜைகள்

வரலாற்றுச் சிறப்பு பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா செவ்வாய்கிழமை(29) அன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் அன்று மாலை விசேட பூஜைகள் மிக சிறப்பாக நடைப்பெற்றது.










# கஞ்சா போதையில் பலரை பந்தாடிய சாரதி

வார நாட்களில் காலையில் நெரிசல் மிகுந்த ஒவ்வொரு நகரமும் பரபரப்பாக இருக்கும். மக்கள் வெறித்தனமாக நகர்கிறார்கள். சிலர் ரயிலில் ஏற அல்லது பேருந்தில் ஏற அவசரப்படுகிறார்கள். மற்றவர்கள் வீதி சமிக்ஞை இல்லாத இடங்களில் செல்ல அவசரப்படுகிறார்கள். அவர்களின் மனதில் ஆயிரத்து ஒரு கேள்விகள் உள்ளன. அவற்றில் வேலையின் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் அன்றாட வாழ்க்கையின் பிரச்சினைகள் உள்ளன.

காலையில் வேலைக்கு விரைந்த ஒவ்வொருவரின் விருப்பமும் தனது வேலையை முடித்துவிட்டு மாலையில் பாதுகாப்பாக வீடு திரும்புவதாகும். கட்டுப்பாடற்ற ஓட்டுநர்களின் செயல்களால் அத்தகைய மக்களின் வாழ்க்கை சோகமாக முடிந்தால் எவ்வளவு துயரமாக இருக்கும்?

போக்குவரத்து விபத்து சம்பவங்கள் தினமும் கேட்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை ஓட்டுநர்களின் அலட்சியம் மற்றும் அதிக வேகத்தால் ஏற்படும் விபத்துகள் என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு கூறுகிறது. இதற்கு மிகச் சமீபத்திய உதாரணம் பொரளை நகரில் நடந்த போக்குவரத்து விபத்து.

பாரந்தூக்கி ஓட்டுநரின் கட்டுப்பாடற்ற செயல்களால் ஒருவர் உயிரிழந்துள்ளார், மேலும் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர். ஒரு நவீன கார் ஆறு மோட்டார் சைக்கிள்கள் உட்பட 9 வாகனங்கள் துண்டு துண்டாக நசுக்கப்பட்டன. இதுபோன்ற சம்பவங்களுக்கு எதிராக விரைவான மற்றும் முறையான சட்ட நடவடிக்கை எடுத்து கடுமையான தண்டனைகளை விதிப்பது அவசியம்.

இந்த பொறுப்பற்ற, அநாகரீகமான, பொறுப்பற்ற ஓட்டுநர் கஞ்சா புகைத்து இருந்ததாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வார நாட்களில் காலை என்பது பாடசாலைகள் குழந்தைகள் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்லும் நேரம். ஒரு பாடசாலையின் அருகில் இந்த விபத்து நடந்திருந்தால் ஏற்பட்டிருக்கும் துயரத்தின் அளவு விவரிக்க முடியாதது.

நெடுஞ்சாலையில் இரட்டைக் கோட்டை கடக்கும்போது முன்னோக்கி குதித்து உடனடியாக அபராதம் விதிக்கும் பொலிஸ் அதிகாரிகள், காலை நெரிசல் நேரத்தில் கொழும்பின் நெரிசலான பகுதியில் இதுபோன்ற பாரந்தூக்கி பயணிப்பதை கவனிக்கவில்லையா? அத்தகைய நேரத்தில் பாரந்தூக்கிகள் பயணிக்க அனுமதித்தது யார்? இந்த பிரச்சினைகளுக்கு அவசர தீர்வுகள் தேவை.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர், பல பேருந்து ஓட்டுநர்கள் போதைப்பொருள் உட்கொள்வது தெரியவந்துள்ளதாகக் ஒருமுறை கூறியிருந்தார். சம்பந்தப்பட்ட சங்கத்தின் தலைவர் இதுபோன்ற ஒரு அறிக்கையைப் பகிரங்கமாக வெளியிட்ட பிறகும், அதற்கு எதிராக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுத்ததாக எங்களுக்குத் தெரியாது. இருக்கை பட்டி சட்டம், வாகனங்களின் தரநிலை மற்றும் ஓட்டுநர்களின் தொழில்முறை குறித்து அதிகாரிகள் பிரச்சினைகளை முன்வைத்தபோது, பல போக்குவரத்து சங்கங்கள் அதை எதிர்த்தன.

தொழில்முறை என்பது ஒருவர் ஈடுபட்டுள்ள தொழிலில் உள்ள திறமை. தொழில்முறை திறன் ஒவ்வொரு தொழிலுக்கும் அவசியம். இந்த ஓட்டுநர்களின் தொழில்முறையை மேம்படுத்தவும் ஒழுக்கத்தை ஏற்படுத்தவும் முறையான நடவடிக்கைகள் மற்றும் தேசிய கொள்கைகள் வகுக்கப்படுவது கட்டாயமாகும். போக்குவரத்து அமைச்சு இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

எங்களை நாங்கள் தான் அமைதிப்படுத்த வேண்டும். எவரையும் நாம் குழப்புதல் ஆகாது. எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறரின் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானது கிடையாது. தேவையற்ற விமர்சனங்கள், நெஞ்சத்தை நோகடித்தல், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்க செயலாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல! அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது. ஒருவர் தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவைகளில் அக்கறை கொண்டே இயங்குகின்றார். இந்த நிலையில் அக்கறையுடன் வாழ்பவர், மற்றவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன் வெறும் சடப்பொருள் அல்ல; சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல!

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# சிவப்பு சட்டை ஆட்சியாளர்களின் மனதில் 'மாற்றம்' ஏற்பட வேண்டும்

முருகானந்தன் தவம்

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் காய்ச்சல் அடித்து முடிந்து விட்ட நிலையில், தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் காய்ச்சல் அடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த தேர்தலை உடனடியாகவே நடத்த வேண்டுமென சிறுபான்மையினக் கட்சிகள் வலியுறுத்திவரும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரி- ரணில் கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் அரசுகள் நடத்தாத, அல்லது நடத்த முடியாத,விரும்பாத இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதையே முற்றாக எதிர்க்கும் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள் நடத்துவார்களா என்பதே இன்றுள்ள கேள்வி.

இலங்கையில் தமிழர்களின் தனி நாடு கோரிய ஆயுதப் போராட்டமே மாகாண சபை ஆட்சி முறைக்கு வித்திட்டது. இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987 அக்டோபர் 29ஆம் திகதி கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய இலக்கு இலங்கை அரசு அதன் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாகவே இருந்தது. இதன் படி 1987 நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது.

1988 பெப்ரவரி 3ஆம் திகதி இலங்கையில் மத்திய மாகாணம் , கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம்,வடக்கு மாகாணம்,வடமேற்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம் என 9மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கான முதலாவது தேர்தல் 1988 ஏப்ரல் 28ஆம் திகதி வடமத்திய, வடமேல், சப்ரகமுவ, மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக 1988 ஜூன் 2ஆம் திகதி மத்திய, தென் மற்றும் மேல் மாகாணங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பின்னர் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் 1988 நவம்பர் 19ஆம் திகதி நடத்தப்பட்டது.

மாகாண சபையின் பதவிக் காலம் 5 வருடங்களாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 1993இல் இரண்டாவது மாகாணசபைத் தேர்தலும் 2004இல் மூன்றாவது மாகாணசபைத் தேர்தலும் முதலில் ஒரே தடவையில் நடத்தப்பட்ட நிலையில், பின்னர் தேர்தல்கள் பிரித்து பிரித்து நடத்தப்பட்டதால் 2008 -2009களில் நான்காவது மாகாண சபைத் தேர்தலும் 2012,2013,2014களில் அடுத்தடுத்த மாகாண சபைத் தேர்தல்களும் இடம்பெற்றன.

இவ்வாறான நிலையில், மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த போதும் இதுவரையில் இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் பத்தாம் சரத்து மற்றும் அரசமைப்பின் 154 ஈ உறுப்புரை ஆகியனவற்றின்படி, மாகாண சபையொன்றின் பதவிக்காலம் நிறைவடைந்து, அந்த மாகாணசபை கலைந்த நாளிலிருந்து, நான்கு வாரக் காலத்துக்குள், குறித்த மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தலை, தேர்தல் ஆணைக்குழு விடுக்க வேண்டும். ஆனால், மாகாண சபைகள் கலைந்து பல வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரை மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்படவில்லை.

இவ்வாறு எந்தவொரு மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படாத நிலையில் மாகாணசபைகள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. இதனை பயன்படுத்தி ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் தமக்கு விசுவாசிகளான ஆளுநர்களை ஒவ்வொரு மாகாணங்களுக்கும் நியமித்து தமது நோக்கங்கள், தேவைகள், திட்டங்கள், இலக்குகளை இலகுவாக அடைந்து கொள்ளும் நிலையே கடந்த பல வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றன.

இதற்கிடையில் கடந்த கோட்டாபயவின் அரசிலும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி , அதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியதையடுத்து, கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரவை கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான யோசனை, அப்போதைய பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனால் முன்வைக்கப்பட்டு ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இவ்வாறு ஒருபுறம் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் கோட்டாபய ராஜபக்ஷ அரசு அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக்கொண்டு மறுபுறம் மாகாணசபைகளுக்கான மூலாதாரமான 13ஆவது திருத்தம் ஒழிக்கப்படவேண்டும், மாகாண சபைக்கான தேர்தல்கள் நடத்தப்படக் கூடாதென்ற இனவாதக் கருத்துக்களையும் கோட்டாபய அரசு தட்டி எழுப்பிவிட்டது. மாகாண சபைகள் வெள்ளை யானைகளாக இருப்பதாக அரச தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டனர். கோட்டாபய அரசின் அமைச்சரவைக் கூட்டத்திலும் அப்போதைய முக்கிய அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர ஆகியோர் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதுடன், மாகாண சபை முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர். இந்நிலையில், கோட்டாபய அரசு மக்கள் போராட்டத்தினால் விரட்டப்பட்டதனால் மாகாண சபைகளுக்கான தேர்தல் முயற்சிகளும் கைவிடப்பட்டன .

இவ்வாறான நிலையில், மீண்டும் தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற வலியுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. மாகாணசபை முறைமையை முற்றாக இல்லாமல் செய்வதற்கே சிங்கள தேசியக் கட்சிகள் விரும்புவதாகச் சுட்டிக்காட்டும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதற்கு இடமளிக்காமல் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன. இவ்வாறான நிலையில்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் சட்ட ரீதியான சில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன்படி, அமைச்சு மட்டத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் 2017ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் 2019 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியின் எம்.பி. சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணை என்பன தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி ஆராய்ந்து வருகிறோம். இதுகுறித்து சகல தரப்பினருடனும் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம் என தற்போதைய மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

ஆனால், இலங்கை -இந்திய ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்ட, அந்த ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நீதிமன்றத்தை நாடி துண்டித்த, மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்ற கொள்கையைக்கொண்ட இந்த அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எந்தளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் அல்லது நடவடிக்கை எடுப்பார்கள் என்பதே இன்றுள்ள கேள்வி.

மைத்திரி-ரணில் நல்லாட்சியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டபோது, எதிர்த்தவர்கள், கோட்டாபய ஆட்சியில் மாகாண சபைகளுக்குத் தேர்தலுக்கான முயற்சிகள் என்ற நாடகம் நடத்தப்பட்டபோது கூட, அந்த நாடகத்தையே முழு மூச்சாக எதிர்த்தவர்கள் இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் இருக்கும்போது அதனை நடத்த விரும்புவார்களா? அல்லது தமது இனவாத அரசியலை முன்னெடுக்கச் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர மற்றும் மகா சங்கத்தினர் தான் விடுவார்களா?

அதுமட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் பெரு வெற்றி பெற்ற அனுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியினர் சில மாதங்களில் நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மக்களின் ஆதரவை கணிசமானளவு இழந்து தோல்விப் பாதையில் சென்று கொண்டிருக்கும் நிலையில், மாகாண சபைகளுக்கானத் தேர்தலை நடத்தி மீண்டுமொரு படுதோல்வியைச் சந்திக்க விரும்பமாட்டார்கள். ஆகவே, மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டத் திருத்தத்தை பயன்படுத்தி மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது இழுத்தடிக்கவே முடிந்தளவுக்கு முயற்சிப்பார்கள்.

மாகாண சபைகளுக்கானத் தேர்தலை உள்ளடக்கிய 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் தாய் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்ரமசிங்கவே நடத்தாது இழுத்தடித்த, தமிழ் மக்களுக்கு 13 அல்ல, 13 பிளஸ் தீர்வினை வழங்குவோம் என ஐ.நாவுக்கு உத்தரவாதமளித்த ராஜபக்ஷக்களே நடத்த விரும்பாத, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பை வைத்துக் கொண்டு அதன் ஆதரவோடு ஆட்சி நடத்திய மைத்திரி -ரணில் நல்லாட்சி அரசே நடத்தாத மாகாண சபைகளுக்கான தேர்தலை மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்குவதனை கடுமையாக எதிர்த்த, எதிர்க்கும் 3இல் 2 பெரும்பான்மை பலத்தோடு ஆட்சியிலுள்ள ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தே.ம.ச. ஆட்சியாளர்கள் நடத்தினால் அதுதான் இந்த நாட்டில் ஏற்பட்ட முதல் 'மாற்றம்'ஆக இருக்கும். ஆனால், அது நடக்க முதலில் சிவப்பு சட்டை ஆட்சியாளர்களின் மனதில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் தொடர்பில் 'மாற்றம்' ஏற்பட வேண்டும்.

## கடிதங்கள்

### மீராவோடை வடிகான்களின் அவல நிலை



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மீராவோடை பொதுச் சந்தை பகுதியில் காணப்படும் வடிகான்கள் அடைபட்டிருப்பதாலும், சுத்தப்படுத்தப்படாமல் இருப்பதாலும், அவை மோசமான நிலையில் உள்ளன.

இந்த வடிகான்களில் சேரும் குப்பைகளும், கழிவுகளும் அடைப்பை ஏற்படுத்தி, நீரோட்டத்தை தடுத்துள்ளது.

இதனால், தேங்கி நிற்கும் நீர் துர்நாற்றம் வீசுவதோடு, கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரக் கேடுகளையும் ஏற்படுத்துகின்றன.

அத்தோடு, வடிகான்களுக்கு மூடிகள் போடப்படாமல் இருப்பதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிச் செல்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனமெடுத்து இதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

- எச்.எம்.எம்.பர்ஸான்



### தற்காலத்தின் வேகத்தில் நாம் பேச மறந்த

# முதியவர்களின் கனவுகளுக்கான குரல்



டிலக்சனா விஜயகுமார்,
முதலாம் வருட மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.

“முதியவர்களைப் பற்றிக் கதைக்க என்ன தகுதி இருக்கிறது?” என்று யாராவது என்னைக் கேட்டால், “நாளை நானும் ஒரு முதியவர் தானே!” இன்றைக்கு நம்முடைய இந்த உலகத்தில் அதிகளவான முதியவர்களைக் கொண்ட ஜப்பான் ஐக்கிய நாடுகள் சபையினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 29% சதவீதமானவர்கள் காணப்படுகின்றார்கள். சராசரியாக 84.5 வயது வரை அவர்களது ஆயுட்காலம் காணப்படுகின்றது. அங்கு காணப்படுகின்ற மக்கள் இவ்வாறாக அதிகளவான ஆயுட்காலம் கொண்டு நீண்ட காலம் வாழ்வதற்கான பிரதான காரணங்களாகக் கூறப்படுவது அவர்களுடைய உணவுப் பழக்க வழக்கங்கள் (அதிக கொழுப்பு இல்லாத உணவு) வகைகள், சுத்தமான சூழல், மகிழ்வான வாழ்க்கை என்பன பிரதான இடத்தை பெறுகின்றன. உலகளவில் அதிகளவான முதியோர் இல்லங்களை கொண்ட நாடுகளாக வளர்ச்சி அடைந்த நாடுகள் தான் காணப்படுகின்றன.

ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் முதியோர் இல்லங்கள் குறைவாகக் காணப்படுவதற்குப் பிரதான காரணம் பாரம்பரிய குடும்ப அமைப்பாக உள்ளது. ஆனாலும் இன்று சற்று மாற்றங்கள் ஒன்றாக ஆரம்பித்துள்ளது. ஒரு சந்தேகம் என்னவென்றால் ஒரு குழந்தை பிறந்தவுடன் சிரிக்கின்றதா? நடக்கின்றதா? கதைக்கின்றதா? தன் வேலைகளைத் தான் செய்கின்றதா? உண்மையில்

அக்குழந்தைக்கு விபரம் தெரிந்து தன்னைத்தான் உணர ஒரு துணை தேவை. அதற்குத்தான் அவர்களுடைய பெற்றோர்கள் உடன் இருக்கின்றார்கள். அனைவரும் சொல்லக் கேட்டிருப்போம் குழந்தையும் தெய்வமும் ஒன்று என. அது எவ்வளவு உண்மை என்று தெரியவில்லை!

நான் நம்புவது என்னவென்றால், குழந்தையும் மூத்தோர்களும் ஒன்று என, இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு ஜீவன்களுக்கும் முதுமை என்பது தவிர்க்க முடியாத ஒன்று யாராலும் அதனை நிறுத்த முடியாது. காலத்தின் வேகம் நம்மையும் கொண்டு சென்று இளமையின் முடிவு வயோதிபத்தின் ஆரம்பத்தில் நிறுத்தும். உண்மையில் நமது இளவயது வாழ்க்கையை எவ்வாறு கழிக்கின்றோம்? எவ்வாறு வாழ்கின்றோம்? என்பது எமது இறுதி வாழ்க்கை கட்டத்தில் பிரதான தாக்கத்தினை உண்டாக்கும். உழைக்கும் இளவயதில் பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடைந்தவர்களாக வர ஒவ்வொருவரும் கட்டாயம் முயற்சிக்க வேண்டும். முதுமையில் பொருளாதார தன்னிறைவுடன் இருக்க நாம் இளவயதில் கொஞ்சம் கடின உழைப்பு மேற்கொள்வதில் தவறில்லை.

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள், அருமையான உறவுகளை நாம் தேடிக்கொள்ள வேண்டும். பிறந்த குழந்தைகளுக்குப் பாடசாலை செல்லும் வரை நண்பர்கள் என்று யாரும் இருக்க மாட்டார்கள். குழந்தைப் பருவத்தில் மிகக் குறைவாகக் காணப்படும் நண்பர் வட்டம் இளவயதில் சற்றே அதிகரிக்கும். மீண்டும் முதுமை பருவத்தில் நண்பர்கள் குறைவடைவார்கள். இதனாலேயே என்னவோ வெளிநாடுகளில் ஒரு நடைமுறை. மாதாந்தமோ அல்லது வாரவாரமோர வயதானவர்கள் அனைவரும் தமக்கென்று ஒரு குழுவை ஆரம்பித்து சந்திப்பது. மனம் விட்டுக் கதைப்பது. தம் சோகங்களையும் சந்தோசங்களையும் பரிமாறிக் கொள்ளுவது. அப்படி இருக்கின்ற பொழுது வயதானாலும் அவர்களுக்கு நிச்சயம் நண்பர்கள் குறைய மாட்டார்கள்.

அவர்களுடைய சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு, தங்களுடைய குடும்பத்தில் வெளிப்படுத்த முடியாத சொல்ல முடியாத விடயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு நண்பர் குழாம் அவர்களுக்குள் காணப்படும். அப்படி அவர்களுக்கு வயதான காலத்தில் ஒரு நண்பர் கூட்டத்தை உருவாக்கிக் கொடுப்பது நிச்சயம் எம் கடமை. நாங்களும் அவ்வாறு தானே. இளம் வயதில் எங்களுடைய சகோதரர்களிடத்திலும் பெற்றோரிடத்திலும் சொல்ல முடியாத விடயங்களை வெளிப்படுத்துவதற்காக எங்களுக்கு என ஒரு நண்பர் வட்டத்தை நாம் உருவாக்கிக்கொள்வோம். அதேபோல, வயோதிப காலத்தில் குடும்பத்தில் வெளிப்படுத்த முடியாத விடயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு நண்பர் வட்டம் இருப்பதில் ஒன்றும் தவறில்லை. நம்முடைய சமூகத்தில் நாம் கண்கூடாகக் காணக்கூடிய ஒரு விடயம் என்னவென்றால் மகனோ , மகளோ வெளிநாட்டில். தாய் தந்தையர் கவலையில். தம் பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் கழிக்க வேண்டிய காலம் ஒரு வகையில் அனாதரவாக இருக்கும். இன்னும் சில நேரங்களில் அவர்களுக்கு தொலைபேசியை சரிவர உபயோகிக்கத் தெரியாமல் தொழில்நுட்ப அறிவு, சமூக வலைத்தளங்கள் தொடர்பான அறிவு சற்று குறைந்ததாக நினைத்த நேரத்தில் தம் பிள்ளைகளின் சுக துக்கங்களை அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருப்பார்கள். ஒரு வகையில், இவ்வாறான ஒரு விடயம் அவர்களின் மன அழுத்தத்திற்குக் காரணமாக அமையும். ஆனால், இனி வருகின்ற அதாவது எதிர்காலத்தில் முதுமை அடையப்போகின்றவர்களுக்கு இந்த பிரச்சனை இல்லை. ஏனெனில் இன்று பிறந்த குழந்தை ஒரு தாலாட்டினை கூட தொலைபேசியில் தான் கேட்கின்றது.

ஒவ்வொரு பருவ காலத்திலும் தொழில்நுட்ப பாவனையுடனேயே வளர்க்கின்றது. சமூக வலைத்தளங்களைப் பற்றிய அறிவு நிறையவே காணப்படுகின்றது. இன்னும் சில நேரங்களில் முதுமை அடைந்தவர்கள் தம்மைச் சூழ உறவினர்கள் படை இருந்தாலும், சமூக வலைத்தளங்களில் மூழ்கும் போக்கும் காணப்படுகின்றது. ஆக! அனைத்து விடயங்களையும் அளவுடன் அறிந்து வைத்திருப்பது எதிர்கால வயோதிபர்கள் எமக்கு சிறப்பு. இன்றைக்கு உள்ளூரில் உள்ள நாம் நினைக்க மறந்த விடயம் என்னவென்றால் இளம் வயதினர் நாங்கள் எங்களுடைய உணவு தேவையை வீதியோர உணவுகளை வாங்கி தீர்த்துக் கொள்கின்றோம். ஆரோக்கியம் இல்லாத உணவுகளை உண்பதிலும் ஆர்வத்தைச் சற்று

அதிகமாக்கி உள்ளோம். உண்மையில் நம் வீட்டில் உள்ள நம் தாத்தா, பாட்டி, பெற்றோருக்கு ஆரோக்கியமான உணவுகளை வழங்க வேண்டும் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். நம்முடைய தாத்தாவும் பாட்டியும் பெற்றோரும் கூட இயற்கையின் அழகினை இரசிக்க தகுதியுடையவர்கள் தான். அவர்களால் இயலுமாக இருந்த பொழுது எம்மை எமது நண்பர்களுடன் சுற்றுலா செல்ல அனுமதித்தார்கள். என்றால் அவர்களின் முதுமை காலத்தில் அவர்களை நாம் அழைத்துச் செல்ல வேண்டியது நமது கடமை. அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதும் நமது கடமை. நாமும் ஒரு வகையில் முதுமைக்காலத்தில் நம் பெற்றோர்களை வீட்டில் உள்ள மூத்தோர்களைத் தனிமையில் வாழ வைத்து விடுவோம். அவர்களுக்காக நேரம் ஒதுக்கவும் மறந்து விடுவோம். தொலைபேசியில் சமூக வலைத்தளங்களுக்குள் வரும் ஒரு காணொளியில் தன் பிள்ளைகளால் துரத்தப்பட்ட பெற்றோர்களின் தனிமையைக் கண்டு, துயர நிலையைக் கண்டு பரிதவிக்கும் நாம் எம் வீட்டில் உள்ள பெரியோர்களும் தனிமையில் தான் இருக்கின்றார்கள் என்பதைக் கவனிக்க மறந்து விடுகின்றோம். சிறு வயதில் விழுந்து விடுவோமா? அடிபட்டு விடுவோமா? என்று கண்ணுக்குள் நம்மை வைத்துப் பார்த்துக் கொள்வார்கள் நம் பெற்றோர்களும் தாத்தா, பாட்டி கூட. ஆனால், இன்றைக்கு மறுக்கப்பட்ட உண்மை என்ன தெரியுமா? வயதான காலத்தில் அவர்களை வைத்தியசாலை அழைத்துச் செல்லக் கூட அருகில் பிள்ளைகள் இருப்பதில்லை.

சபிக்கப்பட்ட விடயம் என்ன தெரியுமா? இன்றைக்கு முதியவர்கள் நம் வீட்டில் இருப்பதை விட முதியோர் இல்லத்தில் இருப்பதையே சந்தோஷமானது. சிறந்தது. என்று கூறும் நிலை வந்துவிட்டது. அதற்காக முதியோர் இல்லங்கள் இருப்பது தவறு என்று அல்ல. அவர்கள் கூறும் அளவிற்கு நிலைமையை நாம் கொண்டு வந்து விட்டோம் என்பது நிதர்சனம். வேகாத வெயிலிலும் தோட்டத்தில் விளைந்த காய்கறிகள், மரக்கறிகளைப் பறித்துச் சென்று சந்தையில் விற்று நான் விரும்பி கேட்டதை, எனக்குப் பிடித்ததை என் தந்தை கொண்டு வருவார். அவரைப் பார்த்துக்கொள்வது என் கடமை அல்ல. என் உரிமை. இன்று முதுமைக்காலத்தில் பெற்றோர்களை யார் பார்ப்பது? அவர்களுக்கு செலவு செய்வது யார்? வைத்தியசாலை அழைத்துச் செல்வது யார்? தேவையானதை வேண்டிக் கொடுப்பது யார்? என எத்தனை சண்டைகள் பிள்ளைகளிடத்தில். காலத்தின் வேகம் சொல்லும் உன் பிள்ளைகள் உனக்கு இதைச் செய்வார்கள் என்று! முதுமை என்பது சாபம் அல்ல. அது அனுபவங்களினால் உண்டான முதிர்ச்சி. காலத்தின் தொடர்ச்சியான வட்ட செயல். நேற்று என் பெற்றோர் முதியவர் என்றால் இன்று நான். நாளை என் பிள்ளை.

---

### கண்ணீரில் உறைந்த செம்மணி:

# உளவியல் ரீதியான ஓர் அதிர்ச்சிக் குறிப்பு



சயந்தினி ஆனந்தராசா,
உளவியல் சிறப்புக்கலை,
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையின் வரலாற்றில் செம்மணி படுகொலை ஒரு இருண்ட அத்தியாயமாகும். இது ஒரு தனிப்பட்ட சம்பவம் மட்டுமல்ல இன மோதல்களின் ஆழமான காயங்களையும், மனித மனதின் இருண்ட பக்கங்களையும் வெளிப்படுத்தும் ஒரு துயரமான நிகழ்வு. உளவியல் ரீதியாக இந்த படுகொலையை அணுகும்போது, அச்சம், கோபம், இழப்பு மற்றும் சமூகத்தின் கூட்டு மனசாட்சியில் அது ஏற்படுத்தும் தாக்கம் போன்ற பல அடுக்கடுக்கான உணர்வுகளையும் அனுபவங்களையும் நாம் ஆராய வேண்டியுள்ளது.

## அச்சத்தின் பிடியில்: வாழ்வும் மரணமும்

ஒவ்வொரு நாளும் மரணம் ஒரு நிழலாகத் தொடர்ந்தது. குண்டுகள், துப்பாக்கிச் சூடுகள், சுற்றிவளைப்புகள் என வாழ்வின் ஒவ்வொரு கணமும் அச்சத்தால் சூழப்பட்டிருந்தது. இந்த தொடர்ச்சியான அச்சம், மனித மனதை எந்த அளவுக்குப் பாதிக்கும்? உளவியல் ரீதியாக, இது ‘நாள்பட்ட மன அழுத்தக் கோளாறு’ அல்லது ‘பிந்தைய அதிர்ச்சி மன அழுத்தக் கோளாறு’ போன்றவற்றுக்கு வழிவகுக்கும். செம்மணி மக்களின் வாழ்வில் அச்சம் என்பது ஒரு உணர்வு மட்டுமல்ல, அது ஒரு நிரந்தர நிழலாக இருந்தது. உயிர் வாழும் ஒவ்வொரு முயற்சியும் மரணத்தை அண்டியே நிகழ்ந்தன. தங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாக்கும் வேட்கை, ஆனால் அதற்கான வழிவகைகள் இல்லாத கையறு நிலை இவை அனைத்தும் உளவியல் ரீதியான பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கும். அச்சம் என்பது வெறும் உடல்ரீதியான அச்சுறுத்தல் மட்டுமல்ல, அது மனதின் ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவி, நம்பிக்கையைச் சிதைத்து, எதிர்காலத்தைப் பற்றிய பயத்தை விதைக்கும். இரவு நேரங்களில் கேட்கும் ஒவ்வொரு சத்தமும், தூரத்தில் தெரியும் ஒவ்வொரு ஒளியும் மரணத்தின் அடையாளமாகத் தோன்றும். இந்த அச்சம், உறக்கமின்மை, பதட்டம், மனச்சோர்வு மற்றும் அன்றாட வாழ்க்கையைச் சாதாரணமாக வாழ முடியாமை போன்ற உளவியல் சிக்கல்களை உருவாக்கியது.

## மனிதாபிமானமற்ற செயல்கள்: உளவியல் பின்னணிகள்

போரின்போது, நடைபெறும் மனிதாபிமானமற்ற செயல்கள் எவ்வாறு சாத்தியமாகின்றன? இது ஒரு சிக்கலான உளவியல் கேள்வி. செம்மணி படுகொலையில் ஈடுபட்டவர்கள், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், மனிதநேயமற்ற செயல்களைச் செய்வதற்குத் தூண்டப்பட்டிருக்கலாம். ‘அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல்’ என்ற உளவியல் கோட்பாடு, மில் கிராம் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டபடி தனிநபர்கள் அதிகாரத்தின் கீழ் கொடூரமான செயல்களைச் செய்யத் தயங்குவதில்லை என்பதைக் காட்டுகிறது. குழு மனப்பான்மை தனிமனிதப் பொறுப்பற்ற தன்மை மற்றும் எதிரிகளை மனிதத் தன்மையற்றவர்களாகக் கருதுதல் போன்ற உளவியல் நிகழ்வுகள் போர்க்காலக் குற்றங்களுக்குப் பங்களிக்கின்றன. இராணுவ வீரர்களுக்குப் பயிற்சியின்போது, எதிரியை ‘மனிதர்கள்’ அல்ல, மாறாக ‘அச்சுறுத்தல்’ அல்லது ‘இலக்கு’ என்று பார்க்கப் பழக்குவிப்பது, இத்தகைய செயல்களுக்கு அடித்தளம் அமைக்கக்கூடும். அச்சம், விரக்தி, பழிவாங்கும் உணர்வு, மற்றும் போர்ச்சூழல் உருவாக்கும் கட்டுப்பாடற்ற தன்மை ஆகியவை இணைந்து, தனிமனித ஒழுக்கத்தையும் மனிதநேயத்தையும் தகர்த்தெறிந்து, கொடூரமான செயல்களுக்கு வழிவகுத்திருக்கலாம். போர் என்பது, மனிதனின் இருண்ட பக்கங்களை வெளிக்கொண்டு வரும் ஒரு வினையூக்கியாகச் செயல்படுகிறது.

## துயரின் ஆழம்: இழப்பும் துக்கமும்

துக்கம் என்பது ஒரு தனிப்பட்ட அனுபவம். ஆனால், செம்மணியில், அது ஒரு கூட்டுத் துக்கமானது. பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், கணவர்களை இழந்த மனைவிகள், சகோதரர்களை இழந்த சகோதரிகள். இவர்களின் வாழ்வு முழுவதும் ஒரு நிரந்தர வடு. இத்தகைய அதிர்ச்சிகரமான இழப்பு, உளவியல் ரீதியாக ‘சங்கடமான துக்கம்’ அல்லது ‘அதிர்ச்சி துக்கம்’ போன்றவற்றை உருவாக்கலாம். இறந்தவர்களைச் சரியாக அடக்கம் செய்ய முடியாமை, நீதிக்கான ஏக்கம், மற்றும் எஞ்சியிருக்கும் கேள்விகள் அனைத்தும் துக்கத்தை மேலும் ஆழமாக்கின. மனநல சிகிச்சை, சமூக ஆதரவு, மற்றும் நீதிக்கான போராட்டம் ஆகியவை இந்த காயங்களை ஆற்றுவதற்கு அவசியமானவை. துக்கம் என்பது வெறுமனே ஒரு சோகமான உணர்வு மட்டுமல்ல அது ஒரு நீண்ட மற்றும் சிக்கலான செயல்முறை. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் மரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாமலும், அவர்களின் இறுதிச் சடங்குகளை முறையாக நடத்த முடியாமலும் தவித்திருப்பார்கள். இந்த நீடித்த துக்கம், உளவியல் ரீதியாக அவர்களை முடக்கி, அன்றாட வாழ்க்கையை வாழ விடாமல் செய்திருக்கும்.

## மறைக்கப்பட்ட உண்மைகள் மற்றும் நீதிக்கான போராட்டம்

உண்மையை மறைப்பது, நீதியை மறுப்பது என்பது பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைச் சிதைத்து, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மீண்டும் ஒருமுறை நிகழ்த்துவதற்குச் சமம். நீதிக்கான போராட்டம் என்பது வெறும் சட்டம் சார்ந்த செயல்பாடு மட்டுமல்ல அது பாதிக்கப்பட்டவர்களின் உளவியல் நலனுக்கும் அத்தியாவசியமானது. உண்மையை வெளிக்கொணர்வது, பொறுப்புக்கூறலை உறுதி செய்வது, மற்றும் இழப்பீட்டைப் பெறுவது ஆகியவை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருவித மன அமைதியையும், துயரத்திலிருந்து மீண்டு வர ஒரு வாய்ப்பையும் வழங்கும். இந்தச் சம்பவத்தில் நீதி மறுக்கப்பட்டது, காயங்களை ஆற்றும் வாய்ப்புகளைக் குறைத்தது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஒரு ஆழமான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியது. எதிர்காலத்திற்கான நம்பிக்கையைச் சிதைத்தது. உண்மை மறுப்பு என்பது ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியைப் பாதிக்கும் ஒரு நோய் போன்றது. இது சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியைக் குலைத்து மக்கள் மத்தியில் அவநம்பிக்கையையும், விரக்தியையும் விதைக்கும்.

## கூட்டு அதிர்ச்சி மற்றும் சமூகத்தின் மீதான தாக்கம்

செம்மணி படுகொலையின் கொடூரமான நிகழ்வுகள் ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியில் ஆழமான காயங்களை உருவாக்குகின்றன. இது ‘கூட்டு அதிர்ச்சி’ என்று அழைக்கப்படுகிறது. சமூகத்தின் நம்பிக்கை சிதைந்து, அச்சம் ஆழமாகப் பதிந்து, இனங்களுக்கு இடையிலான உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தும். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில், இந்த கூட்டு அதிர்ச்சி தலைமுறைகள் கடந்து தொடரலாம். அடுத்த தலைமுறை கூட, இந்த நிகழ்வுகளின் மறைமுகமான உளவியல் தாக்கங்களை அனுபவிக்கலாம். இத்தகைய அதிர்ச்சியிலிருந்து மீள, சமூக உரையாடல்கள், உளவியல் ரீதியான ஆதரவு, மற்றும் கடந்த கால அனுபவங்களை அங்கீகரிப்பது அவசியம். இந்த நிகழ்வுகளைப் பற்றிய வெளிப்படையான கலந்துரையாடல், எதிர்காலத்தில் இத்தகைய கொடூரங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க உதவும். ஒரு சமூகம் கூட்டு அதிர்ச்சியால் பாதிக்கப்படும்போது, அது தங்கள் அடையாளத்தை, கலாச்சாரத்தை, மற்றும் உறவுகளைக் கேள்விக்குள்ளாக்கும். சமூகத்தின் பிணைப்புகள் தளர்த்தப்பட்டு, அவநம்பிக்கையும் அச்சமும் மேலோங்கும்.

## நினைவுகூரல் மற்றும் முன்னோக்கிய பயணம்

செம்மணி படுகொலை போன்ற நிகழ்வுகளை நினைவுகூருவது என்பது வெறும் கடந்த காலத்தை நினைத்துப் பார்ப்பது மட்டுமல்ல. அது ஒரு உளவியல் சுத்திகரிப்பு செயல்முறையாகும். அநீதியை அங்கீகரிப்பது, பாதிக்கப்பட்டவர்களின் துயரத்தைப் புரிந்துகொள்வது, மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றின் பாடங்களைக் கற்றுக்கொடுப்பது ஆகியவை முக்கியமானவை. நினைவுகூரல், சமூகத்திற்கு ஒரு ‘காதர்சிஸ்’ (Catharsis - உணர்ச்சி ரீதியான வெளியீடு) ஆக செயல்பட முடியும். இது அதிர்ச்சியிலிருந்து மீண்டு வருவதற்கான ஒரு படியாகும். இது சமூகங்களிடையே நம்பிக்கையை மீட்டெடுக்கவும், நல்லிணக்கத்தை வளர்க்கவும் உதவும். ஒரு சமூகத்தின் நினைவகத்தில் இத்தகைய நிகழ்வுகள் உயிர்ப்புடன் இருப்பது எதிர்கால தலைமுறையினர் கடந்த காலத்தின் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு, அமைதியான மற்றும் நீதியான சமூகத்தை உருவாக்குவதற்கு உதவும். நினைவுகூரல் என்பது வெறும் நினைவூட்டல் மட்டுமல்ல, அது ஒரு சமூகப் பொறுப்பு.

## உளவியல் ரீதியான மீட்சி மற்றும் நல்லிணக்கத்தின் தேவை

செம்மணி படுகொலை போன்ற நிகழ்வுகளின் உளவியல் வடுக்கள் காலப்போக்கில் மங்கக்கூடும், ஆனால் அவை ஒருபோதும் முழுமையாக மறைவதில்லை. பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் தொடர்ச்சியான உளவியல் ஆதரவும், சிகிச்சை முறைகளும் அவசியமாகும். உளவியல் ஆலோசனை, சமூக ஆதரவு குழுக்கள், மற்றும் நல்லிணக்க முயற்சிகள் ஆகியவை இந்த காயங்களை ஆற்றுவதற்கு உதவும். சமூக நல்லிணக்கம் என்பது வெறுமனே அரசியல் பேச்சுவார்த்தைகள் மட்டுமல்ல அது உளவியல் ரீதியான ஏற்றுக்கொள்ளலையும், புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டது. பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளை அங்கீகரித்து, அவர்களுக்கான நீதியைப் பெறுவது, மற்றும் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழாது என்பதை உறுதிப்படுத்துவது போன்றவை உளவியல் ரீதியான மீட்சிக்கு மிகவும் அத்தியாவசியமானவை. சமூகங்களுக்கிடையான நம்பிக்கையை மீட்டெடுத்து, கடந்த காலத்தின் வலிகளைப் பகிர்ந்து கொண்டு, ஒரு பொதுவான எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதே உண்மையான நல்லிணக்கமாகும். இது ஒரு நீண்ட பயணம் ஆனால் உளவியல் ரீதியான healing-க்கு (குணமடைதலுக்கு) இது மிக முக்கியம்.

செம்மணி படுகொலை ஒரு துயரமான வரலாற்று நிகழ்வு. ஆனால் அது உளவியல் ரீதியாக ஆழமான பாடங்களை நமக்குப் போதிக்கிறது. மனித மனதின் வலிமை, அச்சத்தை எதிர்கொள்ளும் திறன், துயரத்திலிருந்து மீளும் உறுதி, மற்றும் நீதிக்கான அலைக்கழிப்பு ஆகியவை இந்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கியமான உளவியல் அம்சங்கள். இந்த நிகழ்வு, போரின் கொடூரமான விளைவுகளை மட்டுமல்லாமல் மனித மனதின் உளவியல் பின்னணிகளையும், பாதிக்கப்பட்டவர்களின் வலிகளையும், சமூகத்தின் கூட்டு அதிர்ச்சியையும் நமக்கு உணர்த்துகிறது. இத்தகைய கொடூரங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க கடந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வது, உளவியல் ரீதியான காயங்களை ஆற்றுவது, மற்றும் நீதிக்கான போராட்டத்தைத் தொடர்வது மிக முக்கியம். செம்மணிப் படுகொலை என்பது ஒரு மறக்க முடியாத பாடம். மனிதநேயம் மற்றும் அமைதியின் அவசியத்தை வலியுறுத்தும் ஒரு பயங்கரமான நினைவுச் சின்னம். இந்த அதிர்ச்சிக் குறிப்பு, இலங்கையின் வரலாற்றில் மட்டுமல்ல, மனிதகுலத்தின் கூட்டு மனசாட்சியிலும் ஒரு நிரந்தர நினைவாக இருக்கும்.

டோக்கியோ/மாஸ்கோ



கம்சத்கா தீபகற்பத்தில் 8.7 ரிக்டரில் நிலநடுக்கம்:

# சுனாமி பேரலைகள் ஊழித்தாண்டவம்



ரஷ்யாவின் கிழக்கு பகுதியான கம்சட்கா தீபகற்பத்தில் 8.7 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து ரஷ்யாவின் குரில் தீவுகள் மற்றும் ஜப்பானின் வடக்கு தீவு பகுதியான ஹொக்கைடோவில் சுனாமி பேரலைகள் கரையை தாக்கின.

கம்சட்கா பகுதிக்கு கிழக்கு, தென்கிழக்கில் சுமார் 125 கிலோ மீட்டர் தொலைவில் சுமார் 19.3 கிலோமீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்த தையடுத்து, ரஷ்யா, ஜப்பான் மற்றும் பசிபிக் கடலை ஒட்டியுள்ள நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மக்கள் உயரமான பகுதிக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். இதற்காக சைரன் ஒலிக்கப்பட்டது.

இந்நிலையில், சுமார் 4 மீட்டர் உயரம் வரையிலான சுனாமி பேரலைகள் ரஷ்யாவின் குரில் தீவு பகுதியை தாக்கியது. தொடர்ந்து ஹவாய், சிலி, ஜப்பான் மற்றும் சாலமன் தீவுகளில் சுனாமி எச்சரிக்கையை பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் விடுத்தது. நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்பட்டதை ரஷ்யாவின் டாஸ் (TASS) செய்தி முகமை உறுதி செய்துள்ளது. மக்கள் அடைக்கலம் தேடி வீதிகளில் குவிந்ததாக டாஸ் தெரிவித்துள்ளது. அங்கு மின்சார வசதி மற்றும் மொபைல் நெட்வொர்க் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்.

அலாஸ்காவில் உள்ள தேசிய சுனாமி எச்சரிக்கை மையமும் சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அலாஸ்கா, ஹவாய், கலிபோர்னியா, ஓரிகான், வொஷிங்டன் உள்ளிட்ட பகுதிகளுக்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தின் தொடக்கத்தில் 7.4 ரிக்டர் அளவில் கம்சட்கா பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

செயற்கை நுண்ணறிவால்

## “காத்திருக்கும் பயங்கர ஆபத்து”



செயற்கை நுண்ணறிவின் ((Artificial Intelligence - AI) மேம்பாடு மற்றும் வளர்ச்சியினால் ஏற்படவிருக்கம் மிக பயங்கர ஆபத்துகளை மென்பொருள் நிறுவனங்கள் மறைப்பதாக செயற்கை நுண்ணறிவின் தந்தை (காட்ஃபாதர் ஆஃப் ஏஐ) என அழைக்கப்படும் ஜெஃப்ரி ஷிண்டன் எச்சரித்துள்ளார்.

ஒன் டெசிஷன் பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய ஹிண்டன், பெரு நிறுவனங்களின் தலைவர்கள், வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவினால் ஏற்படவிருக்கும் மிகப் பயங்கர ஆபத்துகளைக் கண்டும் காணாமல் இருப்பதாகவும், மூடிய கதவுகளுக்குள் அவற்றைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்து உணர்ந்திருந்தாலும் தொடர்ந்து மறைத்து வருகிறார்கள் என்று நேரடியாகவே குற்றம்சாட்டியிருக்கிறார்.

மிகப்பெரிய நிறுவனங்களில் இருப்பவர்கள், செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தவிருக்கும் ஆபத்துகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதில்லை. டெமிஸ் போன்றவர்கள் மட்டுமே அதன் ஆபத்துகளை உணர்ந்து ஏதேனும் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

தொற்றுநோய்கள் அல்லது அணு ஆயுதப் போர்களின் அபாயங்களைப் போலவே, AI மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்கும் அபாயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்கள் இணைந்து இது தொடர்பாக பொது அறிக்கை வெளியிட்டுள்ளது. மனித விதிகளுக்கு சூப்பர்-இன்டெலிஜென்ட் AI அமைப்புகள் கட்டுப்படாமல் செயல்படும் வாய்ப்புகள் உள்ளன. பெரிய போர், இயற்கை பேரிடர் போன்ற மோசமான நிகழ்வுகளில் மனித இருப்பை அச்சுறுத்தக்கூடும் செயல்களில் ஏஐ ஈடுபடலாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் அபாரமான வளர்ச்சியை சந்தித்து வருவதால், அதன் பயன்பாடுகள் குறித்துக் கூடுதலான விழிப்புணர்வு தேவைப்படுகிறது என்றார்.

அமெரிக்கா

## “நண்பனான இந்தியாவுக்கு 25 சதவீத வரி”

### ட்ரம்ப் சூசகம்

இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான இருதரப்பு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார். இருப்பினும், இந்தியாவுக்கு 20 முதல் 25 சதவீதம் வரையில் வரி விதிக்க வாய்ப்புள்ளதாக அவர் சூசகமாக கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றார். அப்போது, உலக நாடுகளின் பொருட்களுக்கான இறக்குமதி வரி பட்டியலை வெளியிட்டார். இது உலக நாடுகளை அதிர்ச்சியடைய வைத்தது. பின்னர் இந்த புதிய வரி விதிப்பு 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். இதன்படி, கடந்த ஜூலை 9ஆம் திகதி கெடு முடிய இருந்த நிலையில், ஆகஸ்ட் 1ஆம் திகதி வரை நீட்டித்தார்.

இதனிடையே, பல்வேறு நாடுகள் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இதில் ஜப்பான், இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்டவற்றுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இந்தியாவுடனும் வரி விதிப்பு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (29) அன்று விமானத்தில் இருந்தபடி

**“ஏனைய நாடுகளை காட்டிலும் அதிக வரிகளை இந்தியா விதித்துள்ளது. இது பல ஆண்டுகளுக்கு நடைமுறையில் உள்ளது. இப்போது நான் ஜனாதிபதி உள்ளேன். அதனால் நீங்கள் அதை தொடர கூடாது என ட்ரம்ப் கூறினார்**

செய்தியாளர்களை ட்ரம்ப் சந்தித்தார். அப்போது இந்தியாவுக்கு 20 முதல் 25 சதவீதம் வரை வரி விதிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது குறித்து செய்தியாளர் ஒருவர் ட்ரம்ப்பிடம் வினவினார்.

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இந்தியா நட்பு நாடாக விளங்கி வருகிறது. எனது வேண்டுகோளை ஏற்று பாகிஸ்தான் உடனான மோதலை நிறுத்தினார்கள். வரி விதிப்பு தொடர்பாக அவர்களுடனான ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. அது தொடர்பான பேச்சுவார்த்தை சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

இருந்தாலும், ஏனைய நாடுகளை காட்டிலும் அதிக வரிகளை இந்தியா விதித்துள்ளது. இது பல ஆண்டுகளுக்கு நடைமுறையில் உள்ளது. இப்போது நான் ஜனாதிபதி உள்ளேன். அதனால் நீங்கள் அதை தொடர கூடாது” என ட்ரம்ப் கூறினார்.






இன்று ஆரம்பிக்கிறது ஐந்தாவது டெஸ்ட்:

# தொடரை சமப்படுத்துமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டியானது ஓவலில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கின்ற நிலையில் இப்போட்டியை வென்றாலே தொடரை இந்தியா சமப்படுத்தலாமென்ற நிலையில் இப்போட்டி முக்கியத்துவம் பெறுகிறது.

இந்திய அணியில் றிஷப் பண்டை துருவ் ஜுரேல் பிரதியிடுவதுடன், ஜஸ்பிரிட் பும்ராவை ஆகாஷ் டீப் பிரதிடுவது உறுதியானதாகக் காணப்படுகின்றது. முன்னர் போல தற்போது சுழற்பந்துவீச்சுக்கு சாதகமானதாக ஓவல் ஆடுகளம் காணப்படாத நிலையில் குல்தீப் யாதவ் ஷர்துல் தாக்கூருக்குப் பதில் அணியில் இடம்பெறுவாரா என்பது கேள்விக்குறியாக காணப்படுகிறது.

இது தவிர அன்ஷுல் கம்போஜ்ஜுக்குப் பதிலாக பிரசீத் கிருஷ்ணா அல்லது அர்ஷ்டீப் சிங் விளையாடும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

மறுபக்கமாக இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் ஜொஃப்ரா ஆர்ச்சர், கிறிஸ் வோக்ஸ், பிறைடன் கார்ஸுக்குப் பதிலாக ஜொஷ் டொங்க், குஸ் அட்கின்ஸன், ஜேமி ஒவெர்ட்டன் விளையாடுவதோடு லியம் டோஸனுக்குப் பதில் சாம் குக் விளையாடக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில்

## அவுஸ்திரேலியக் குழாம்களில் ஓவன்

தென்னாபிரிக்காவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டி, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான அவுஸ்திரேலியாவின் குழாம்களில் சகலதுறைவீரர் மிற்செல் ஓவன் இடம்பெற்றுள்ளார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் ஓவன் இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இதேவேளை, ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமுக்கு வேகப்பந்துவீச்சாளர் லான்ஸ் மொரிஸ் மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மிற்செல் ஸ்டார்க், பற் கமின்ஸுக்கு தொடர்ந்து ஓய்வளிக்கப்பட்டுள்ள நிலையில், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் ஹேசில்வூட் ஆகியோர் இரண்டு குழாம்களுக்குத் திரும்பியுள்ளனர்.

ஒருநாள் சர்வதேசப் போட்டி அணிக்கான தலைவராகவும் மிற்செல் மார்ஷ் செயற்படவுள்ளார். காயத்திலிருந்து குணமடைந்த மற் ஷோர்ட்டும் இரண்டு குழாம்களிலும் இடம்பெற்றுள்ளார்.

இருபதுக்கு-20 குழாம்: மிற்செல் மார்ஷ் (அணித்தலைவர்), ஷோன் அபொட், டிம் டேவிட், பென் டுவார்ஷுஸ், நாதன் எலிஸ், கமரன் கிறீன், ஜொஷ் ஹேசில்வூட், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ், மற் கூனுமென், கிளென் மக்ஸ்வெல், மிற்செல் ஓவன், மத்தியூ ஷோர்ட், அடம் ஸாம்பா.

ஒருநாள் குழாம்: மிற்செல் மார்ஷ் (அணித்தலைவர்), ஸ்கேவியர் பார்ட்லெட், அலெக்ஸ் காரி, பென் டுவார்ஷுஸ், நாதன் எலிஸ், கமரன் கிறீன், ஜொஷ் ஹேசில்வூட், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ், மர்னுஸ் லபுஷைன், லான்ஸ் மொரிஸ், மிற்செல் ஓவன், மத்தியூ ஷோர்ட், அடம் ஸாம்பா.





## ஓவல் மைதான பணியாளருடன் கம்பீர் முரண்பாடு

இங்கிலாந்தின் ஓவல் மைதான பணியாளருடன் இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் கௌதம் கம்பீருக்கு முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ஓவல் ஆடுகளத்தை பயிற்சியாளர்கள் பரிசோதிக்கும்போது அங்கிருந்து நகருமாரு தங்களுக்கு கூறப்பட்டதாக இந்திய அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் சிதன்ஷு கொடக் தெரிவித்துள்ளார்.

ஓவல் மைதான தலைமைப் பணியாளர் லீ போர்ட்டிஸை நோக்கி கம்பீர் தனது விரலை நோக்கி காட்டியதுடன், நீ மைதானப் பணியாளர் மாத்திரமே, நாங்கள் என்ன செய்வதென்று நீ கூறமுடியாதெனக் கூறியுள்ளார்.

இந்நிலையில், தன்னை நோக்கி தொடர்ந்து முறைத்தால் சர்வதேச கிரிக்கெட் சபையின் போட்டி மத்தியஸ்தரிடம் முறையிடுவேன் என கம்பீரிடம் போர்டிஸ் கூறியுள்ளார்.

## விலகியது கொல்கத்தா



தலைமைப் பயிற்றுவிப்பாளர் சந்திரகாந்த் பண்டிட்டமிருந்து இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) கொல்கத்தா நைட் றைடர்ஸ் விலகியுள்ளது.

இவ்வாண்டு ஐ.பி.எல். புள்ளிகள் பட்டியலில் எட்டாமிடத்தையே கொல்கத்தா பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூன்று பருவகாலங்களுக்கு கொல்கத்தாவுடன் பண்டிட் காணப்பட்ட நிலையில், அவ்வணி 2024ஆம் ஆண்டு பத்தாண்டுகளின் பின்னர் சம்பியனாகியிருந்தது.

## மர்ஸெய் செல்லும் உபமெயாங்க்?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலின் முன்னாள் முன்களவீரரான பியர்-எமெரிக் உபமெயாங்க், இவ்வாரம் பிரெஞ்சு லீக் 1 கழகமான மர்ஸெய்க்கான தனது நகர்வை பூர்த்தி செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக சவூதி அரேபியக் கழகமான அல் குவாட்சியாவுக்காக விளையாடிய 36 வயதான உபமெயாங்க், இம்மாதம் ஓராண்டுக்குப் பின்னர் அக்கழகத்திலிருந்து வெளியேறி இருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 31, ஜூலை 2025, இல.8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.